# மாலை மணி

சென்னை 9—1—50 திங்கட்கிழமை


# அன்புதான்; ஆத்திரமல்ல!

'இந்து — முஸ்லிம்' என்ற இருசொற்களுக்கும் இடையே இருக்கும் சிறுகோடு, ஒற்றுமையின் உருவமாக நிற்கவில்லை-நிற்க முடியவில்லை. பிளவு படுத்திக் காட்டும் பேதத்தின் பெரும் சின்னமாகவே சென்ற பல ஆண்டுகளாகவும் இருந்து வந்ததது, இப்பொழுது இருந்து வருகிறது என்பதை யாவரும் நன்கு உணர்வர்.

இந்து-முஸ்லிம் இரு பக்கங்களிலிருந்தும் எழுந்த மாற்சரியம் அந்தச் சிறுகோட்டைப் பிணக்காக்கிப்; பிணக்கைப் பூசலாக்கிப், பூசலைக் குருதி கொட்டச்செய்யும் கிளர்ச்சிப் புயலாக்கி நாட்டிலே நாசவிளைவு உண்டான பிறகு ஒரு முடிவு ஏற்பட்டது; அதுதான் இந்தியா-பாக்கிஸ்தான் பிரிவினை. இந்து—முஸ்லிம்கள் வெட்டிமடிகிற அளவுக்குக் குரோதத்தையும், தீயநிலைமையையும் உண்டாக்கியவர்களில் முதல் 'சிறப்பிடம்' பெற்றவர்கள் இந்துமகாசபைக்காரர்கள்; அவர்களது உள்ளத்தில் குடிபுகுந்திருந்த இந்துமத உணர்வு முஸ்லிம்களைத் தோழமைக் கொள்ளச்செய்யவில்லை; மாறாக மனக்கசப்பையே வளர்த்து வந்தது. இந்து மதத்தலைவர் விதைத்தவிதையை அவர்களே அறுவடை செய்து கொள்ளவும் நேர்ந்தது. காங்கிரஸ் இந்துத்தலைவர்கள் பாக்கிஸ்தான் பிரிவினைக்கு ஒத்துக் கொண்டார்கள் என்றால், திருப்தியோடு அல்ல; வேறு மார்க்கமில்லை என்ற காரணத்தால் விதைத்த விதையினால் உண்டான-பலனை அறுவடை செய்வதல்லாமல் வேறுவழியே இல்லை என்ற நிலை ஏற்பட்ட போதுதான், காந்தியார், நேரு, பட்டேல், ஆஜாத், பிரஸாத் ஆகியவர்களின் கண்ணெதிரிலேயே பாக்கிஸ்தான்பிரிந்தது. இந்த நிலைமை ஏற்பட்டதற்குப் பிறகுதான் ஓரளவுக்காவது இந்தியத்துணைக்கண்ட அரசியலில் உள்நாட்டுஅமைதிநிலவ வழி ஏற்பட்டது.

இவ்வளவெல்லாம் நடந்த பிறகு—அவற்றை நேரிலே கண்டபிறகு, அகில பாரத இந்து மகாசபைத் தலைவர் தோழர் டாக்டர் என். பி. கரே, இந்தியா-பாக்கிஸ்தான்- மீண்டும் இணைய வேண்டும் என்று கூறுகிறாரென்றால், 'என்ன பொருள். நெருக்கடி-கிளர்ச்சி-பூசல்-உள்நாட்டுப்போர் ஆகியவற்றை மீண்டும் வரச் சொல்கிறார் என்றுதானே பொருள். அப்படி ஏற்படும் குழப்பநிலையில், இந்துக்களின் கதி என்ன ஆகிறது என்பதைப்பற்றிக்கூட கவலையில்லை, முஸ்லிம்கள் இலட்சக்கணக்கில் இரத்த வெள்ளத்தில் மிதக்கிறார்களா என்பதைக் காணவேண்டுமென்பதே அவரது பேரவா போலும் என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது.

குழப்பநிலை தீரும் மருந்தாகக் கொள்ளப்பட்ட பிரிவினையை அழித்துவிட்டால், மீண்டும் குழப்பநிலை ஏற்படும் என்ற அச்ச உணர்வு தோன்றிய காரணத்தால்தான், நாகபுரியில் பேசிய பண்டித நேருவும், பம்பாயில் பேசிய சர்தார் பட்டேலும், டாக்டர் கரேயின் கூற்றைக் கண்டித்தொதுக்கியுள்ளனர். அப்படிக் கூறுவதால் தோழர்கள் நேரும், பட்டேலும், 'பாக்கிஸ்தான்' என்பது உரிமை வேட்கையின் உண்மை உருவம், என்று ஒப்புக் கொண்டுவிட்டார்கள் என்பதல்ல; உள்நாட்டு ஆட்சி முறையைப் பாதிக்கும் குழப்ப நிலையைத் தவிர்க்க எண்ணுகிறார்கள் என்பதேயாகும். பண்டிதர்—பட்டேல் ஆகியவர்களின் பேச்சுகளை ஆய்ந்து பார்த்தால் பாக்கிஸ்தான் மீது எவ்வளவு ஆத்திரக கனலைக் கக்கியிருக்கிறார்கள் என்பது எளிதில் விளங்கும். இப்பொழுதே பொருளாதாரப் போர் தொடுத்திருப்பதாகவும், அது சமந்தமாகப் பிரயோகிக்கக் கூடிய பலமுள்ள ஆயுதங்கள் கையில் வைத்திருப்பதாகவும், அவற்றைப் பிரயோகிக்க இப்பொழுது எண்ணமில்லை என்றும் பட்டேல் கூறியிருக்கிறார். இந்தியா நினைத்தால் பாக்கிஸ்தானை, பொருளாதார நெருக்கடியில் வைத்து சிக்கிச் சீரழிக்கமுடியும் என்னும் கருத்தினை, பண்டித நேருவின் நாகபுரி பேச்சு ஒருவாறு தெளிவு படுத்துகிறது. இந்தக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டுதான், பண்டிதர்-பட்டேல் பேச்சுக்களுக்குப் பதில் சொல்லும் முறையில் டாக்டர் கரே கூறுகிறார் "இந்தியா-பாக்கிஸ்தானை ஒன்றாக இணைக்க வேண்டும் என்பதில் இந்து மகா சபைக் கொள்கைக்கும், நாகபுரியிலும், பம்பாயிலும் முறையே பேசிய பண்டிதர்-பட்டேல் பேச்சுக்களுக்கும் முரண்பாடு எதும் கிடையாது" என்று. இவர்கள் மூவர் கூற்றுக்களையும் ஒன்றாக வைத்து ஒப்பிட்டுப் பார்க்கும் போது நேருவும் பட்டேலும் ஆட்சிப்பீடத்திலிருப்பதால் அப்படிக் கூறுகிறார்கள், டாக்டர் கரே அப்பால் இருப்பதால் கொஞ்சம் அளவுக்கு மீறி பேசுகிறார் என்பது ஒருவாறு தெளியப்படும்.

எப்படியோ அரசியல் சூழ்நிலை வேறுவகையற்ற முறையில், பாக்கிஸ்தானை உருக் கொள்ளச்செய்துவிட்டது. நாடு பிரிவினை பெற்ற காலத்தில் இரு நாட்டினரும், தங்களுக்கிடையே அடுத்து அன்புதான் தவழும் என்ற கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர் இன்று இருசாராரும் ஆத்திரக் கனலைப் பரிமாறிக்கொள்கிறார்கள். அது இருவர்க்கும் நல்லதல்ல. இந்தியா-பாக்கிஸ்தான் தகராறுகள் தீர அறிவுடம்பட்ட அன்பு வழிதான் ஏற்றதாகுமேயொழிய ஆணவ வழிப்பட்ட ஆத்திரமல்ல!

மேலும் மேலும் இந்தியத் துணைக்கண்டத்தின்திக்குக்குத் திக்கு குழப்பமும், கிளர்ச்சியும் ஏற்படாமல் இருக்க வேண்டுமாயின், வர்க்கத்திற்கொரு வட்டாரமாக பிரித்துத் தந்து, அவைகள் தம் விருப்பம்போல் வாழ வழி செய்வதே யாகும். அப்படிக்கில்லாமல், ஆணவத்தையும் ஆத்திரத்தையும் நம்பி நீண்ட நாட்களுக்கு உரிமை வேட்கைக் கிளர்ச்சிகளைத் தடைபடுத்திவிட முடியாது. என்றாவது ஒருநாள் குமுறும் எரிமலை வெடித்தே தீரும். ஆகவே எரிமலை குமுறுமல் முன்னேற்பாடு செய்து கொள்ளுதல் நலம்; ஆகவே இந்தியத் துணைக்கண்டத்தின் முன்னேக்கிய பிரச்சினைகளைத் தவிர்க்க ஆத்திர வழியைக் கடைப் பிடிக்காமல், அன்பு நிலைபட்ட அறிவுடமை வழி இந்துத் தலைவர்களும், காங்கிரஸ் தலைவர்களுக் காரியமாற்றுவார்களாக!

## அறிவுக் கதிர்!

தாங்கள் மேலானவர்கள் என்ற கர்வத்தால் ஆரியர்கள், இந்தியாவில் வசித்த மற்ற ஜாதியாருடன் கலந்து கொள்ளவில்லை. ஆரியர்கள் மற்ற ஜாதியாரோடு கலக்காமல் இருப்பதற்காகப் பல சட்டங்களையும் விதி விலக்குகளையும் ஏற்படுத்தினார்கள். வெகு காலத்திற்குப் பின்பு இதன் காரணமாக வர்ணபேதங்கள் ஏற்பட்டன. இக்காலத்தில் உள்ள ஜாதி' வகுப்புகள் இதனால் உண்டானவைகளே.

—பண்டித நேரு

## செஞ்சீனாவுக்கு மூலப்பொருள்கள்

செஞ்சீனாவுக்கு, ஏராளமான மூலப்பொருள்கள் இங்கிருந்து அனுப்பப்பட்டு வருகின்றன. சீன கம்யூனிஸ்டு சர்க்கார் எதாவது தடை விதித்தால் ஒழிய, இந்த வர்த்தகம் தொடர்ந்து நடைபெற்று வரும் என்று தெரிகிறது.

## சென்னைக்கு கனேடிய எஞ்சின்கள்

இந்தியாவில் உபயோகப்படுவதற்கென 10 எஞ்சின்கள் கனடாவிலிருந்து ஜனவரி 4ந் தேதியன்று பீட்டர்தால் என்ற பிரிட்டிஷ் கப்பலில் சென்னைத் துறைமுகம் வந்தடைந்தது. ஒவ்வொரு எஞ்சினுடையவும் எடை 92 டன் என்று கூறப்படுகிறது. மார்ச் மாதத்தில் மேலும் 36 எஞ்சின்கள்வருமென்று தெரிகிறது.

## பாஸ்பேட் எருக்கள்

தீவிர சாகுபடி திட்டத்தின் கீழ் சென்னை மாகாணத்தில் [illegible] விலையில் பாஸ்பேட் எருக்கள் விநியோகித்து வந்த திட்டத்தை மீண்டும் அமுல் நடத்த சென்னை சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

# சர்க்கார் ஊழியர்களுக்கு வேலை நிறுத்தம் செய்ய உரிமை இல்லையாம்!

—(0)—

## அமைச்சர் காட்கிலின் அர்த்தமற்ற வாதம்!

"நியாயமான கூலி கேட்கத் தொழிலாளருக்கு உரிமையுண்டு. ஆனால் தாங்கள் வாங்கும் கூலிக்கேற்ப பூரணமாக உழைப்பது அவர்களுடையபொறுப்பு. பொதுமக்களிடம் சர்க்கார் ஊழியர்களுக்கு விசேஷ பொறுப்பு உண்டு. நாட்டின் பாதுகாப்பிற்கும் அவசியமான சர்க்கார் வேலைகள் அவர்களை நம்பித்தான் இருக்கின்றன. தனிப்பட்ட ஸ்தாபனங்களில் வேலை செய்யும் ஊழியர்களுக்குச் சில சந்தர்ப்பங்களில் வேலை செய்யும் உரிமை இருக்கலாம்- இருக்கவும் கூடாது. லாபத்திற்காக சர்க்கார் நடத்தப்படவில்லை. ஆகையால் சர்க்கார் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வது சம்பந்தமான பிரச்னை எதுவும் செல்லாது"

என்று ரூர்க்கியில் நடந்த தொழிலாளர் கூட்டமொன்றில், இந்திய சர்க்கார் அமைச்சர் தோழர் என். வி. காட்கில் பேசியிருக்கிறார்.

அரசாங்க ஊழியர் வேலை நிறுத்தம் செய்யக்கூடாது என்பது தோழர் காட்கிலின் வாதம். இதற்கு அவர் கூறும் முக்கியமான காரணம் சர்க்கார் லாபத்திற்காக நடத்தப்படவில்லை; ஆகையால் சர்க்கார் ஊழியரும் வேலை நிறுத்தம் செய்வது சரியல்ல என்பதாகும்.

நிரம்ப சரி. தோழர் காட்கிலின் வாதப்படியே பார்ப்போம். லாபத்துக்காக சர்க்கார் நடத்தப்படவில்லை என்பதற்காக சர்க்கார் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்யக்கூடாது என்பது எந்த நீதியில் அடங்கும் என்று கேட்கிறோம். வேலை நிறுத்தம் என்பது வேதனையின் அறிகுறி. சர்க்கார் ஊழியராக இருப்பினும் வேறு எந்த ஊழியராக இருப்பினும் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற வருவாய் இல்லாவிட்டால் அத்தகைய ஊழியர்கள் உள்ளத்தில் வேதனை எழத்தான் செய்யும். அப்படி வேதனை எழுகின்ற வேளையில் அவர்கள் வேலை நிறுத்தம் செய்யாமல் எப்படி வாளாவிருப்பர்?

எனவே, வேலை நிறுத்தம் இன்னார் செய்யலாம் இன்னார் செய்யக்கூடாது என்று அறுதியிட்டுக் கூறுவது அறிவுடைமையாகாது. சர்க்கார் லாபத்துக்காக நடத்தப்படவில்லை என்பது உண்மையே. தோழர் காட்கில் காட்டும் அதே உண்மையைக் காட்டியே நாம் கேட்கிறோம். லாபத்தை எதிர்பார்க்காத ஸ்தாபனத்தில் தொழிலாளருக்கு ஏன் குறைந்த ஊதியம் இருக்க வேண்டும் என்று. ஊழியருக்கு உற்சாகம் இருந்தால்தானே அவர்கள் செய்யும் ஊழியம் சிறப்புறும்? ஆகவே, எவ்வகையில் பார்க்கினும் அமைச்சர் காட்கிலின் வாதம் அர்த்தமற்றதே!

---

வைத்திய துறையில் சென்ற 50 ஆண்டுகளாக கண்டு பிடிக்கப்பட்ட புது விஷயங்களை எல்லாம் தொகுத்த ஒரு பிரசுரம் வெளியிடப்பட்டிருக்கிறது.

## கம்யூனிசத்தை எதிர்த்து நடவடிக்கைகள்

லண்டன், ஜன. 8—

கொழும்பு காமன்வெல்த் மாநாடும், பாங்காக் யு. என். கீழ்க் கோடி ராஜதந்திரிகள் மாநாடும் முடிந்த பிறகு ஒரு கீழ்க் கோடி பிரதேச மாநாடு கூட்டப்பட்டு கம்யூனிஸம் பரவுவதைத் தடுப்பது பற்றி ஆலோசிக்கப்படலாம் என்று யார்க் ஷயர்போஸ்ட் பத்திரிகை கூறுகிறது.

இவ்விஷயமாக பிரிட்டனும் யுனைடெட் ஸ்டேட்ஸும் கலந்து பேசும் என்று அப்பத்திரிகை கூறுகிறது.

## பாலைவனங்களைப் பண்படுத்தும் திட்டம்

லண்டன், ஜன. 8—

பாலைவனத்தைப் பண்படுத்தி செழிப்பாக்க 'யூனெஸ்கோ' வகுத்துள்ள திட்டம் விஷயமாக பூர்வாங்க பரிசீலனைகளை நடத்த அந்த ஸ்தாபனத்தின் சார்பாக ரிட்சொர்டர் வட ஆப்பிரிக்கா, இராக், எகிப்து பாலைவன பிரதேசங்களுக்குச் செல்ல லண்டனை விட்டுப்புறப்பட்டிருக்கிறார்.

(குளோப்)

## கௌரவ நீதிபதிகள் பற்றி சட்டசபையில் கேள்விகள்

'கௌரவ நீதிபதிகள் நற்பணி ஆற்றி வருகின்றனர். எனவே அவர்களை எடுத்துவிடும் எண்ணமே இல்லை.' என்று சட்டமந்திரி தோழர் மாதவமேனன் ஜனவரி 5ந் தேதியன்று சட்டசபையில் கேள்வியொன்றுக்குப் பதில் கூறுகையில் குறிப்பிட்டார்.

தகுதி திறமை பேரிலேயோ ஆற்றல் பேரிலேயோ கௌரவ நீதிபதிகள் நியமிக்கப்பெறுவதில்லையென்றும் ஆளுங்கட்சித்தொடர்பு கொண்டிருப்போரே தேர்ந்தெடுக்கப்படுகின்றனரென்பது உண்மையாவென தோழர் [illegible] கேட்டதற்கு அது உண்மையேயல்லவென மந்திரி குறிப்பிட்டார்.

## கம்யூனிஸ்டு ஸ்தாபனங்கள்மீது மேற்கு வங்கசர்க்கார் பாய்ச்சல்

மேற்கு வங்க மாகாணத்தைச் சேர்ந்த கம்யூனிஸ்டு ஆதிக்கமுடைய மாணவ தொழிலாளர் ஸ்தாபனங்கள் ஏழுவரை மாகாண சர்க்காரால் சட்ட விரோதமாக்கப்பட்டிருக்கின்றன. இந்தியக் குற்றச்சட்டத்திருத்த ஆக்ட் 15-வது பிரிவின் கீழ் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி ஸ்தாபனங்களினை அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் முறையில் நடந்து கொண்டனவென்று சர்க்கார் கூறுகின்றனர்.

## நாஜி ஜெனரல் மனைவிக்குப் பிரஜா உரிமை பறிமுதல்

மூனிச், ஜன. 6—

முதல் உலகப் போரில் சம்பந்தப்பட்டிருந்த ஜெர்மன் ஜெனரலின் மனைவி ப்ரா மதில்டு லூடென்டார்ப் என்ற 72 வயது மாது நாஜி குற்றவாளி என்று கருதப்பட்டு, அவள் பிரஜா உரிமை பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது.

அவள் எழுதக் கூடாது, எங்கேயும் பேசக் கூடாது என்று தடையுத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

# மந்திரக்கோல் கொண்டு . . .

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

களே!! பெரியாரின் பொருந்தா மணத்திஞல் கருத்து வேற்றுமை கொண்ட நங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை அமைத்துக்கொண்டிருக்கிறோம். எந்தக் கொள்கைகளுக்காகப் பெரியார் பாடுபட்டாரோ, அந்தக்கொள்கைகளையே மாற்றும்படியான திருமணத்தைப் பெரியார் செய்து கொண்டார். அதைப் பற்றிய எல்லா விவரங்களையும் நீங்கள் ஏற்கனவே, பத்திரிகை வாயிலாகவும் வேறு பல தோழர்கள் வாயிலாகவும் அறிந்திருப்பீர்கள். ஆகையால் இப்போது நான் அதைப்பற்றி விவரிக்க விரும்பவில்லை. மொத்தத்தில் பெரியாரின் பொருந்தா மணமே திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாறு தம்" என்ருர்.

### ஆதிநாராயணன்

பின்னர், கொடியேற்ற எழுந்த இராஜபாளையம் தோழர் ஆதிநாராயணன் பேசியதாவது :-

சில நாட்களுக்கு முன்ஞல் திராவிட கழகம் என்ற பேரால் உங்கள் மத்தியில் இருந்த நாங்கள் இன்று திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பேரால் கூடியிருக்கிருேம். இதற்குரிய காரணங்களெல்லாம் நீங்கள் அறிந்ததே. திராவிட கழகத்திற்கும் திராவிட முன்னேற்ற கழகத்திற்கும் அதிக வித்தியாசமில்லை. கழகத்தின் பெயரிலே கொஞ்சம் வித்தியாசமும், கொடியின் அமைப்பு முறையில் கொஞ்சம் வித்தியாசமும் இருப்பது தவிர வேருென்றுமில்லை. ஆகையிஞல் கொடியின் கருத்தைப் பற்றியும் விளக்க வேண்டிய அவசியமில்லாமல் போய்விடுகிறது" என்று கூறிக் கொடியேற்றிஞர்.

### காஞ்சி. கலியாணசுந்தரம்

அடுத்துப் பேசிய காஞ்சி. கலியாணசுந்தரம் குறிப்பிட்டதாவது :—

தோழர்களே !

நமது நாட்டிக்குச்சுதந்திரம் கிடைத்திருக்கிறது என்று சொல்லுகிருர்கள். சுதந்திரம் கிடைத்த பின், நாம் கண்ட பலன் என்ன? வட இந்தியா செல்வத்தில் கொழுத்து வருகிறது! சர்வதேசக் கண் கொண்ட பண்டிதஜவகர்லால் நேரு, அமெரிக்க மூலதனத்தில் தொழில் நடத்தவும் ஐரோப்பியமுதலாளிகளுக்குத் துணை செய்யவும் இருக்கிருர்.

நமது நாட்டைப் பற்றி அவருக்குக் கவலை ஏது! இலங்கை, மலேயா, பர்மா, ஆப்பிரிக்கா முதலிய இடங்களில் வாழும் தமிழர்களைப் பற்றி அவர் என்றைக்காவது கவலைப்பட்டது உண்டா? காரணம் என்ன? அவர் வேறு இனத்தைச்சேர்ந்தவர். நாம் வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள். அவருடைய கலாசாரம் வேறு. நம்முடைய கலாசாரம் வேறு. நம்மைப் பற்றி அவருக்கேன் கவலை?

### திறமையற்ற சர்க்கார் !

இப்போது ஆளுகின்ற சர்க்காரைப் பற்றி நமது காங்கிரஸ் தோழர்கள் சிலர் புகழ்கிருர்கள் உண்மை உணராத காரணத்திஞல்.

தற்போது எங்கும் சர்க்கரை கிடைக்கவில்லை ஏன்? சர்க்கரை ஆலைகள் பூராவும் மூடிவிட்டார்களா? கரும்பு விளையவில்லையா? அப்படி ஒன்றும் நடந்துவிடவில்லை. பின் ஏன் சர்க்கரைக் கிடைக்கவில்லை? ஆச்சாரிய கிருபளானி சொன்னுர், சர்க்கரை கிடைக்காமல் இருப்பதற்குக் காரணம், சர்க்காரின் திறமைக் குறைவுதான் என்று! இந்த ஒரு காரணத்திற்காகவே சர்க்கார் ஆட்சிபீடத்தை விட்டு வெளியேறிவிடலாம்' என்றும்! ஆச்சாரி கிருபளானி என்ன, ஒன்றும் தெரியாதவரா? நமது சுதந்திர சர்க்கார், சர்க்கரைக்கு விதிக்கும் கண்ட்ரோல் விலை ரூ 1-5-0 நமக்கு விற்கப்படும் விலை என்ன? ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் அதிகம் கொடுத்தாக வேண்டும்! இனி, துணியை எடுத்துக் கொள்வோம். இங்கே 5 லட்சம் கைத்தறிகள் இருக்கின்றன. உற்பத்தியான துணிகள் விற்கமுடியாமல் தேங்கிக்கிடக்கின்றன. வட இந்திய சர்க்கார், துணி உற்பத்தியைப் பெருக்குங்கள்! பெருக்குங்கள்! என்று கூச்சலிடுகிறது. துணியின சங்கதி இப்படி இருக்கிறது. உணவைப் பற்றி கேட்கவேவேண்டாம்! இப்போது சர்க்கார்தான் உணவு வியாபாரம் செய்கிறது. என்ருலும் மக்களுக்கு உணவு சரியாகக் கிடைக்கவில்லை. மத்திய சர்க்கார் உணவு மந்திரி தோழர் ஜெயராம்தாஸ் தௌலத்ராம் என்பவரிடம், ஏனையா உணவு கிடைக்கவில்லை? என்ருல், அவர் பருத்த தொந்தியுடன் எழுந்து நின்று கொண்டு, இது, நம்முடைய ஆட்சி. நாங்கள்தான் ஆள்கிருேம். ஆனதால் பொறுத்துக்கொள்ளுங்கள் என்கிருர்! இவர்களுடைய திறமைக்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

### காமராஜர் நல்ல மனிதர் !

நமது காமராஜர் இருக்கிருரே, அவர் நல்ல மனிதன் பாருங்கள் அவர், எங்கே போனுலும் உற்பத்தியை பெருக்குங்கள்! உற்பத்தியைப் பெருக்குங்கள்! என்று சொல்லாமல் இருப்பதில்லை எப்படி உற்பத்தியைப் பெருக்குவது? இங்கே உற்பத்தி பெருக என்ன வசதி இருக்கிறது? இங்கே தொழில் முறையில மாறுதலும், வளர்ச்சியும் ஏற்படாததால்தானே, திராவிடன் வெளிநாடுகளுக்குச் செல்கிருன் பிழைப்புக்காக!

காமராஜர் சொல்லுகிருரே "உற்பத்தியைப் பெருக்குங்கள்" என்று ஒரு உழவன் வருகிருன் காமராஜரிடம். ஐயா! 'எனக்கு நன்ருக உழுவதொழில் தெரியும். ஆனல், நிலமும் மாடும் தன் இல்லை. என்ருல் காமராஜர் தருவாரா? இவைகள்போல ஏராளமான குறைகள் இருக்கின்றன. இந்த ஆட்சியில் என்று சுமார் ஒருமணி நேரம் பேசி முடித்தார்.

### அண்ணுத்துரை

இறுதியாக பெருத்த கைத்தட்டலுக்கிடையே, தோழர் அண்ணுத்துரை பேசியதாவது.—

தோழர்களே! தாய்மார்களே!! தற்போதுள்ள நாட்டின் நிலைமை பற்றி, எனக்கு முன்ஞல் பேசிய தோழர்கள் எடுத்துச் சொன்னுர்கள். ஆளுங்கட்சியினருக்கு நாங்கள் கூறும் குறைபாடுகள் கசப்பாகவே இருக்கும் மிகுந்த சிரமப்பட்டுப் பணம் செலவிட்டு கிணறு தோண்டிக் கொண்டிருக்கும் ஒருவனை மற்ருெருவன் பார்த்து அப்பா! இந்த இடத்தில் கிணறு தோண்டாதே! நல்ல நீர்கிடைக்காது என்று தடுக்க அதைக் கேளாமல் கிணற்றைத் தோண்டியவனிடம் போய், என்னப்பா! நான் சொல்லச் சொல்ல இவ்விடத்தில் கிணறு தோண்டினுயே! இப்போது பார்த்தாயா கிணற்று நீர் உப்பு நீர் ஆக இருப்பதை என்ருல், சிரமப்பட்டுக் கிணறு தோண்டியவனுக்குக் கோபம்தானே வரும்!

அதுபோலவே, காங்கிரஸ் தோழர்கள் அரும்பாடுபட்டுக் கொண்டு வந்த சுதந்திரம் கஷ்டமும் சரித்திரமும் நிரம்பியதாக இருக்கிறதென்ருல், அவர்களுக்குக் கோபம் வரத்தானே செய்யும்! ஆஞல் திராவிட முன்னேற்றக் கழகத்தினரோ, திராவிட கழகத்தினரோ, மற்றவர்களோ, ஆளுங்கட்சியினரைக் குறை சொன்ஞல் "அவர்கள் கூறுவதும் நன்மைக்குத் தான்" என்று பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும் எந்த நாட்டிலும் ஆளுங்கட்சியினருக்கு எதிர்க் கட்சிகள் இருப்பது வழக்கம். அது அவசியமுங்கூட. மூக்கணாங்கயிறு இல்லாத மாடு, சாவியில்லாத வண்டி, ஆகியவைகள் ஆபத்தைத் தரும். அதுபோலவே. எதிர்க்கட்சியில்லாத ஆட்சியும் ஆபத்தாகும்.

### வெள்ளையன் ஆட்சியில்...!

அன்று வெள்ளைக்காரன் ஆட்சி செய்தபோது, ஆட்சியில் உள்ள குறைகளை எடுத்துச் சொல்ல காங்கிரஸ் கட்சி இல்லையாஞல், என்ன ஆகி இருக்கும்? நாடு பெரிதும் சீர்கெட்டுப் போயிருக்கும். 'வெள்ளைக்காரன் ஆட்சியில் நாம் ஏன் குறை சொல்லிக்கொண்டிருக்க வேண்டும்" என்று, காங்கிரஸ்காரர்கள் சும்மா இருந்தார்களேயாஞல், இன்று இந்த நாட்டை, இந்த நிலைமையிற் கூடக் காணமுடியாது. அதுபோலவே, எதிர்க்கட்சியினர்கள் ஆட்சி செய்வோரின் போக்கை எடுத்துக்காட்டி, குறைகளைக் கண்டிக்கத்தான் செய்வார்கள். "யார் ஆண்டாலென்ன" என்றிருந்தால் கஷ்டம் ஏற்படும்! தவிர்க்க முடியாது! எனவே, ஆளுங் கட்சியினராகிய காங்கிரஸ் தோழர்கள், நாங்கள் பேசும்போது சற்று உன்னிப்பாக கவனிக்க வேண்டுகிறேன்.

"என்னடா இப்படி முட்டுக்கட்டை போட்டுக்கொண்டு பேசுகிருன்" என்று, எண்ண வேண்டாம். எங்கள் காஞ்சிபுரத்தில் தேர் இழுக்கும்போது, முட்டுக்கட்டை கொடுத்துக்கொண்டுதான் தேர் இழுக்கிருர்கள். ஏன்? தேர் ஒழுங்காக நடக்கவேண்டும் என்றுதானே! அதுபோலவே, நாங்களும், ஆட்சிபீடம் என்கிற 'தேரை நடத்திச்செல்லும் காங்கிரஸ் தோழர்களுக்கு முட்டுக்கட்டையாகக் காணப்படுகிருேம்.

### இது எமது ஆட்சி!

இப்போதிருக்கிற ஆட்சி வெள்ளையன் ஆட்சியல்ல. விக்கிரமாதித்தன் ஆட்சியுமல்ல. நமது மந்திரிகள் கூடு விட்டுக் கூடு பாய்கிறவர்களுமல்ல. (வேண்டுமாஞல் சில சமயங்களில் கட்சியை விட்டு கட்சி பாய்வார்கள்!) இப்போது நம்மை நாமே ஆள்கிருேம். முன்பு வெள்ளைக்காரன் ஆண்டான். என்ன கஷ்டம் வந்தாலும் அவன் மேல் பழியை போட்டுவிட்டு இருக்கலாம்.

இப்போது அப்படிச் சொல்லித் தப்பிக்கமுடியாது. இப்போது இல்லாமை, போதாமை, கஷ்டங்கள் வந்தால் அதற்கு நாம்தான் பொறுப்பாளி. ஒருவன் வாடகை வீட்டில் குடியிருந்தபோது ஜன்னலில் ஓட்டை இருக்கிறதே என்று வீட்டுக்குச் சொந்தக்காரனைக் குறை கூறிக்கொண்டிருந்தான் பின்பு, அதே வீட்டை சொந்தமாக வாங்கிஞன். அப்படி வாங்கியவன் முதலில் ஜன்னலில் இருந்த ஓட்டையை அடைக்கவேண்டாமா? வாடகைக்கு விடுவிட்டவனே, மற்றவனே வந்து ஏனப்பா! ஜன்னல் ஓட்டையைப் பற்றி பிரமாதப்படுத்திக்கொண்டிருந்தாயே! இன்னும் ஏன், அதை அடைக்காமல் வைத்திருக்கிறாய்? என்று கேட்டால் என்ன பதில் சொல்லுவது?

இதைத்தான் காஞ்சி. கலியாணசுந்தரம் சொன்னுர். நானும் இதையே சொல்கிறேன். நாங்கள் சொல்வது ஆட்சியாளருக்குப் புரியவில்லை. மனிதன் துன்பச் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கிருன். ஆட்சியாளர் சொல்லுகிருர்கள்; "சங்கிலியில் ஒரு வளையை எடுத்து விட்டால் போதும், மனிதன் சுகமாக இருப்பான்" என்று. நாங்கள் சொல்கிருேம். "சங்கிலியை அடியோடு அறுத்தெறிய வேண்டும்" என்று. இதுதான் எங்களுக்கும் அவர்களுக்குமுள்ள பேதம்.

### இங்கு ஏன் கஷ்டம்......!

இந்த நாடு என்ன அரேபியா, ஆப்பிரிக்கா போன்ற பாலைவனமா? ஜெர்மனியைப் போல், இங்கிலாந்தைப்போல் நிலக்கரியும் பெட்ரோலும் தவிர, வேருென்றும் கிடையாதா? அப்படியும் இல்லையே! நம்முடைய நாட்டிலேதான் காட்டியில் தங்கம் இருக்கிறது! நம்முடைய நாட்டிலேதான் கடலடியில் முத்து இருக்கிறது! மூன்று பக்கம் கடல்! இரண்டு பக்கம் மலை! நாலாலும் மலையாலும் கிடைத்த இயற்கை அரண்! எவரும் படை எடுக்க முடியாது! நன்செய் புன்செய் ஏராளம்! இங்கு ஏன் பஞ்சம்? இங்கு இயற்கை தனது வள்ளல் தன்மையைக் காட்டியிருப்பதுபோல், வேறெங்கும் காட்டக்கிடையாதே! பஞ்சம் இருப்பது ஏன்? இதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கிறது. ஏனையா பஞ்சம்? இதைக் கேட்டு நாம் வெட்கப்பட வேண்டாமா? நமக்கு ஏன், வெளியிலிருந்து உணவு வரவேண்டும்?

பண்டித நேரு அமெரிக்கா போனுர். அங்கு அவருக்கு வரவேற்பு அமோகமாக இருந்தது. அதனுல் என்ன பயன்? அங்கு (அமெரிக்காவில்) தேவைக்கு மேல் கோதுமை விளைந்து கிடக்கிறது. நமது பண்டிதர்அவர்களிடம் போய் கோதுமையைக் கேட்டார். "எங்களுக்குத் தருமமாகத்தர வேண்டாம். நாங்கள் பணம் கருகிறோம். ஆனல். விலையாயமாக இருக்க வேண்டும்" என்றுசொன்னுர். அமெரிக்கா ஒப்புக்கொண்டதா? இல்லை! மறுத்துவிட்டது! டாலர் மாற்றங்களில் ஏற்படும் குறைவுகளை எடுத்துக்காட்டி, கோதுமையை விலை குறைக்கமுடியாதென்று கூறிவிட்டது! அந்த நாட்டுடன் உறவும் சலாமும் ஏன்? நம்மால் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியாதா? முடியும். எப்படிஇருந்தால் முடியும்? திராவிடம் தனி நாடாகி வந்தால் முடியும்!

### இப்போதுள்ள நிலை என்ன?

நமக்கு உணவில்லை என்ருல் நாம் சென்னை சர்க்காரைக் கேட்போம், அது வட இந்திய சர்க்காரைக் கேட்டுத்தான் பதில் சொல்லும்! நமக்குக் கல்வி இல்லை. அதிலும், பெண்களுக்குக்கல்லூரிஇல்லை என்று, நமது கல்வி மந்திரி மாதவமேனனைக் கேட்டால், அவர், தாஞகவே கல்லூரி ஏற்படுத்திக் கொடுக்க முடியுமா? உடனே டில்லி சர்க்காரைத்தான் கேட்பார். டில்லி சர்க்கார் இப்போது இதையெல்லாம் கவனிக்கப் பணம் இல்லை என்று சொல்லிவிடும். இப்படியே எதற்கெடுத்தாலும் டில்லி நோக்கி நிற்கும் கொடுமையொழியவேண்டும். இதைத் தான் திராவிடர்கழகமும் திராவிடமுன்னேற்றக்கழகமும் எடுத்துக்காட்டி, திராவிடம் தனியாகவேண்டுமென்று கேட்கின்றன. டில்லி சர்க்

(6-ம் பக்கம் பார்க்க)

## தி. மு. க. பொதுக் கூட்டங்கள்

**10 1-50**

| | | |
|---|---|---|
| பொத்தனூர்.— | (காலை) | சி. என். அண்ணுதுரை, ஏ. சித்தையன், பி பழனிச்சாமி. |
| வாசுதேவநல்லூர்:— | | இரா. சு. தங்கப்பழம், எம் எஸ். சிவசாமி. |

**11-1-50**

| | |
|---|---|
| குளித்தலை:— | சி என். அண்ணுத்துரை. |
| திருவள்ளூர்:— | டி. சண்முகம், சத்தியவாணி முத்து, சி. பி. சிற்றரசு, |
| கடையநல்லூர்:— | இரா. சு. தங்கப் பழம் எம், எஸ். சிவசாமி, ஆ. திராவிட மணி |

## சென்னை மாவட்ட
# தி. மு. க. முதல் மாநாடு

நாள் :— 22-1-50 ஞாயிறு

நேரம் :— காலை 9-மணிக்குத் துவக்கம்

இடம் :— 'பீப்பிள்ஸ் பார்க்' மிருகக் கண்காட்சி சாலைக்குப் பின்புறமுள்ள மைதானத்தில் 'அழகிரிபந்தலில்'

தலைவர் :— சேலம் ஏ. சித்தையன்

துவக்குபவர் :— மதுரை எஸ். முத்து

இரவு 9-30 மணிக்கு

சி. என். ஏ., கே. ஆர். ஆர். நடிக்கும்

'சந்திரமோகன்' நாடகம் நடைபெறும்

விவரங்கட்கு :— கே. கோவிந்தசாமி,

செயலாளர், செ. மா. தி. மு. க. முதல் மாநாடு

2/45, முத்துமாரிச் செட்டித் தெரு, சென்னை-1

# காமன்வெல்த் மாநாட்டில் இந்தியாவின் பங்கே பெரும் பங்காம்!

———(0)———

## நேயல்பேக்கர் காக்கைப் பிடிக்கிறார்

'காமன் வெல்த் மாநாட்டில் இந்தியா மிகப்பெரும் பங்கெடுத்துக் கொள்ளப் போகிறது என்று எனக்குத் தெரியும். அதனால்தான் மாநாடு நடத்த இலங்கையைத் தேர்ந்தெடுத்தோம்."

என்று பிரிட்டிஷ் காமன்வெல்த் மாநாட்டுக்குச்செல்லும் வழியில், காமன்வெல்த் உறவு அமைச்சர் தோழர் பிலிப் நேயல் பேக்கர் கூறியிருக்கிறார்.

தோழர் நோயல் பேக்கர் கூறிய போக்கிலே, இந்தியா காமன் வெல்த் மாநாட்டில் முக்கிய பங்கு வகிக்கப்போகிறது. என்ற அரிய உண்மையை வெளியிட்டிருப்பது கவனிக்க வேண்டியது.

இப்போதுள்ள நிலைமையில் ஆசிய நாடுகளில் இந்தியா ஒன்றுதான், சீனாவுக்கு அடுத்த பதவியை வகிக்கும் ஆற்றல் பெற்று விளங்குகிறது. எனவேதான், தோழர் நோயல் பேக்கர் காமன்வெல்த் உறவு என்ற பெயரில் இந்தியாவைக் கைப்பிடிக்க முனைந்துள்ளார். போகும் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கும் என்று அவருக்குத் தெரியுமாம்! அந்த அளவுக்கு இந்தியாவிடம் நம்பிக்கையை இருக்கிறது பிரிட்டன். இந்தியாவின் உதவியைக்கொண்டு ஆசிய நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்தப்பார்க்கிறது அமெரிக்க-பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம். காமன்வெல்த் மாநாட்டில் ஆசியாவின் பிரச்னைகள் விசேஷமாகக் கவனிக்கப்படுமென்று தோழர் நோயல் பேக்கர் குறிப்பிட்டிருப்பதன் நோக்கமும் இதுதான் சுருக்கச் சொல்ல வேண்டுமானால் இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாடு என்பது இந்திய பிரதமர் தோழர் நேருவும் பிரிட்டிஷ்

## தன் அரசியலைத் தானே திருத்த கனடாவுக்கு உரிமை

ஆட்டவா, ஜன. 8—

கனடாவுக்குத் தன் அரசியலைத் தானே திருத்திக் கொள்ள உரிமையை பிரிட்டிஷ் சர்க்கார் அளித்து விட்டதை யொட்டி இவ் விஷயமாக கலந்து ஆலோசித்து நடைமுறையை நிர்ணயிக்க கனடாவிலுள்ள 10 மாகாணங்களின் பிரதமர்கள் மாநாடு நாளை இங்கு நடைபெறவிருக்கிறது. இம்மாநாட்டில் செய்யப்படும் முடிவுகள் கனடா அரசியலில் அமல்கலனாக இருக்கும்.

## பிறக்கப்போகும் குழந்தை ஆணா பெண்ணா?

பிராங்பார்ட் ஜன 7—

பிறக்கப்போகும் குழந்தை ஆணா பெண்ணா என்பதை மிகவும் சரியாக கண்டுபிடித்துச் சொல்ல ஒரு புதிய முறையை ஜெர்மன் டாக்டர் வில்ஹெம் விட்லெல் கையாண்டிருக்கிறார்.

பிரசவ காலத்திற்கு ஒரு மாதம் முன்பு கர்ப்பிணிகளின் ரத்தத்தை இவர் பரீட்சை செய்கிறாராம். அதிலிருந்து பிறக்கப்போவது ஆணா பெண்ணா என்பதைக் கண்டு பிடித்து விடுகிறாராம்.

இவர் இதுவரை 35 அமெரிக்கப் பெண்களின் ரத்தத்தைப் பரிசோதித்து சரியாக கூறியிருக்கிறார். —ராய்ட்டர்

ஏகாதிபத்தியமும் கூடி கிழக்கில் கம்யூனிசத்துக்கு எதிராக ஓர் முன்னணி அமைக்கத் திட்டம் தீட்டும் ஒரு மாநாடு என்று சொல்ல இடமிருக்கிறது. தோழர்கள் நேரு, பெவின் ஆகிய இருவர் ஜோடு ஆதிக்கமாக அடிமையே இருக்கே இதனை ஒரு வாறு யூகித்தறியலாம்.

# இந்தியாவின் முதல் தலைவர் ராஜேந்திரபிரசாத்?

## கவர்னர்--ஜெனரல் ஆச்சாரியார் ஜன. 27-ல் சென்னை திரும்புவார்!

இந்திய கவர்னர்-ஜெனரல் தோழர் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் ஜனவரி 26-ந்தேதியன்றைய காலை சர்க்கார் மாளிகையின் தர்பார்மண்டபத்தில், இந்தியா குடியரசாகும் பிரகடனத்தைப் படிப்பார். பிரகடனத்தையொட்டி தனது இருக்கையைக் காலி செய்து, தேர்ந்தெடுக்கப்படும் தலைவரை அழைத்து அதில் அமர்த்துவார்.

தோழர் ராஜகோபாலாச்சாரியார் ஜன. 27-அன்று காலை சென்னைக்குத் திரும்பி விட திட்டமிட்டுள்ளாராம். அரசாங்கப் பிரிவினையன்று வாழ்த்து மரியாதையுடன் தோழர் ராஜகோபாலாச்சாரியார் அனுப்பப்படுவார்.

தலைவரைத் தேர்ந்தெடுக்க அரசியலமைப்புசபை ஜன 24-ந் தேதியன்று கூடுகிறது. இப்பெரும் பதவிக்கு டாக்டர் ராஜேந்திர பிரசாதே ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப்படுவாரெனத் தெரிகிறது.

## அறிவிப்பு

'மாலைமணி'யில் வெளியிடுவதற்கென அனுப்பப்பெறும் பொதுக்கூட்டம், மாநாடு பற்றிய அறிக்கைகள் விளம்பரமாகவே கருதப்படுமென்பதையும், அவற்றுக்குரிய கட்டணம் செலுத்தியாக வேண்டுமென்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். 'விளம்பர'மாகக் கொடுக்கப்படாத அறிக்கைகள் 'இனி நடப்பவை'யிலேயே இடம் பெறும்.

நிர்வாகி 'மாலைமணி',

## மேற்கு ஜெர்மனி அரசியலில் கம்யூனிஸ்டு தலையீடு

டஸல்டார்ப், ஜன. 8—

மேற்கு ஜெர்மனியிலுள்ள அரசியல் கட்சிகளில் கம்யூனிஸ்ட் ஏஜெண்டுகள் முக்கியஸ்தானத்தை பிடித்து வருகின்றனர். என்று சோஷலிஸ்டு தலைவர் ஷூமாகர் கூறுகிறார்.

# கழக உறுப்பினர் சேர்க்கும் வாரம்

14—1—50ம் நாளிலிருந்து 20—1—50ம் நாள் முடிய உள்ள "பொங்கல் வாரத்தை" முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சேர்க்கும் வாரமாகக் கொண்டு, நாடெங்கும் கழக உறுப்பினர்களைச் சேர்க்கும்படி, ஆர்வமுள்ள கழகத் தோழர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

**31—3—50** க்குள் உறுப்பினர்கள் சேர்த்தல் முடிந்துவிடவேண்டுமாதலால், உடனடியாக அச்செயலை நிறைவேற்றித்தரத் தோழர்கள் முந்துற வேண்டும்.

உறுப்பினர்கள் சேர்க்கும் இரசீது புத்தகங்களை அந்தந்த மாவட்ட அமைப்பாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் மாவட்டக் கழகம் அமைந்துள்ள மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் மாவட்டக் கழகச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

என். வி. நடராசன்,
செயலாளர் — அமைப்புக் குழு

## இனி நடப்பவை

திருவள்ளூர்— பொங்கல் விழாவை முன்னிட்டு இவ்வூர் பிரசவனியர் சத்திரத்தில் 11—1—50 புதன் மாலை 5 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது, தோழர் டி. சண்முகம் அவர்கள் தலைமையில் தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர் சி. பி. சிற்றரசு ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

பொத்தனூர் (சேலம்)— ஞானியார் தமிழ்ச் சங்கக் கட்டிடத்தில் 10-1-50 செவ்வாய்க்கிழமை காலை 9-மணிக்கு பொத்தனூர் திராவிட முன்னேற்றக் கழகக் கிளையைப் பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்கள் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றுவார். தோழர் அ. சித்தையன் கழகக்கொடியை ஏற்றுவிப்பார். தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமை தாங்குவார்.

## ஜமீன் கிராமங்களில் 'கிஸ்தி' குறைப்பு

சென்னை, ஜன. 6—

ஜனவரி 26-ந் தேதியன்று புதிய ஆர்டினன்ஸ் ஏற்படும் சமயத்தில் மாகாணத்திலுள்ள சுமார் 16,000 ஜமீன் கிராமங்களுக்கு கிஸ்தி குறைவை அறிவிக்கவிருந்ததாக ஏற்பாடு செய்துள்ளதாயும். பிறகு 5 000 கிராமங்கள்தான் மிஞ்சும் என்று 'கிஸ்தி' குறைப்பு ஸ்பெஷல் ஆபீசர். தோழர் எஸ். கே. செட்டூர் இன்று கூறினார். ஜனவரி 26-ஆம் தேதிக்குப் பிறகு இரு மாகாணங்களின் கிஸ்தி குறைப்பு [illegible] 31-ஆம் தேதிக்குள் [illegible] ஜனவரியிலிருந்து [illegible] 31-ஆம் தேதி [illegible] செல்லாது [illegible] என்றும் அவர் மேலும் கூறினார்.

அறிவிப்பு

ரெஜினா மூட்டைப் பவுடர், மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரை தருகிறது சாம்பிள் புட்டி 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும் G. பழனியப்பமுதலியார், மதுரை.

# வானொலி

10-1-50 செவ்வாய்க்கிழமை

**சென்னை**

[211·3 மீட்டர்கள்]

காலை :

7.15 தமிழில் செய்திகள்
7-30 எ. மாணிக்கம்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
8 50 வீணை (அ. இ. ரே. வி.)

பிற்பகல் :

12-30 சுகாதாரப் பள்ளிகளுக்கு
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
2-00 தமிழில் செய்திகள்
2-15 உயர்தரப் பள்ளிகளுக்கு
2 45 குரல்வகை (இசைத்தட்டு)

மாலை :

4-30 ஆரம்பப் பள்ளிகளுக்கு
5-30 ஜி. சீனிவாசன், எஸ். சோமனவல்லி (இரு வயலின்கள்)
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6 20 எஸ். ஏ. குப்புசாமி-பாட்டு

இரவு :

7-00 வி. ராமமூர்த்தி—பேச்சு
7-15 தமிழில் செய்திகள்
7-30 குரல்வகை (இசைத்தட்டு)
7 45 திருச்சியில் உள்ளபடி
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 நாளின் கவலை—நாடகம்
9 30 பி. சக்ரபாணி—பாட்டு
10 00 வாத்ய இசை இசைத்தட்டு
10-30 முடிவு

**திருச்சி**

[395·8 மீட்டர்கள்]

காலை :

7-15 தமிழில் செய்திகள்
7-30 பி. ஆர். கோபாலகிருஷ்ணன்—புல்லாங்குழல்
8 00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 கே. நடராசன்—பாட்டு
8-50 என். வி. வசந்தகோகிலம் (இசைத்தட்டு)

பிற்பகல் :

12 30 சுகாதாரம் பள்ளிகளுக்கு
1 00 சதங்கம் (இசைத்தட்டு)
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 கே. நடராசன்—பாட்டு
2 00 தமிழில் செய்திகள்
2-10 சோமனவல்லி, சீனிவாசன்—வயலின் (இசைத்தட்டு)
2 15 உயர்தர பள்ளிகளுக்கு

மாலை :

4-00 ஆரம்பப் பள்ளிகளுக்கு
5-00 பி. ஆர். கோபாலகிருஷ்
5-30 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 சித்ரகானம் (இசைத்தட்டு)
6 30 [illegible]

இரவு :

7-15 தமிழில் செய்திகள்
7 30 எஸ். துரைசாமி—பேச்சு
8 00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 [illegible] (அ. இ. ரே. வி.)
9 35 நீங்கள் கேட்டவை (இ. த.)
1[illegible] முடிவு

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press. 2/45 Muthumari Chetty Street Madras-1.